# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2050 • மார்ச் 9, 2019 Weekly E-paper • March 9, 2019



**தொலைந்த கோப்புகள்!**

-சுபவீ



**பார்ப்பன ஆணாதிக்கம்!**

-ஸ்ரீவித்யா




**தவணைமுறை ஆணையம்**

தலையங்கம்



# எங்கே முகிலன்?

● மா.உதயகுமார்

**கருஞ்சட்டைத் தமிழர்**

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2050 ● மார்ச் 9, 2019 Weekly E-paper ● March 9, 2019



# எங்கே முகிலன்?

● மா.உதயகுமார்

இருக்கும் இடத்தைவிட்டு இல்லாத இடம் தேடி...

தூத்துக்குடித் துப்பாக்கிச் சூடு சம்பவத்தில் மறைக்கப்பட்ட உண்மைகளை ஊருக்கு உரைக்கும் பொருட்டு தகவல்களை வெளியிட்ட சூழலியல், மனித உரிமைப் போராளி தோழர் முகிலன் இப்போது எங்கோ மறைக்கப்பட்டிருக்கிறார்.

பிப்ரவரி 15 இரவு அவர் காணொளியை வெளியிட்டார். பின்னர் அவர் காணாமல் போய்விட்டார்.

இப்போது பல்வேறு அமைப்புகளும், இயக்கங்களும், அரசியல் கட்சிகளும் தோழர் முகிலனை மீட்கப் போராட்டம் நடத்திக் கொண்டிருக்கின்றன.

வழக்கறிஞர் சுதா ராமலிங்கம், மனித உரிமை ஆர்வலர் ஹென்றி திபேன் ஆகியோர் ஆட்கொணர்வு மனு தாக்கல் செய்ததைத் தொடர்ந்து, இதுகுறித்து விளக்கமளிக்கக் காவல் துறையினருக்குச் சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது. தொடர்ந்து அந்த வழக்கு சி.பி.சி.ஐ.டி-க்கு மாற்றப்பட்டுள்ளது.

ஆனால் தமிழக முதல்வர் திரு. எடப்பாடி பழனிச்சாமி, “அவரது குடும்பத்தினர் புகார் கொடுத்தால் நடவடிக்கை எடுக்கப்படும்” என்றும் “தனிப்பட்ட நபருக்காக அரசு பொறுப்பேற்க வேண்டும் என்று குற்றம்சாட்டக் கூடாது” என்றும் பேசியிருப்பது, இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதைத் தெளிவாகக் காட்டுகிறது. இப்படி ஒரு பதிலைச் சொல்வதற்கா இங்கு ஒரு முதலமைச்சர்?

இவர்கள் யாருடைய கைப்பாவைகள் என்பதும் இங்கே தெளிவாகிக் கொண்டே இருக்கிறது.

“இருக்கும் இடத்தைவிட்டு இல்லாத இடம் தேடி எங்கெங்கோ அலைகின்றார் ஞானத்தங்கமே... அவர் “அனைத்தும்” அறிவாரடி ஞானத்தங்கமே.”

இந்தப் பாடல் வரிகளிலேயே அனைத்துக்குமான விடை அடங்கியிருக்கிறது.

சமூகவிரோத சக்திகளை நாட்டிற்குள்ளேயே வைத்துக்கொண்டு வெளியில் தேடுவது போல் தேடுகிறது இந்த அரசு.

ஒருபக்கம் ஏதோ அநீதி இழைக்கப்பட்டுவிட்டதைப் போல, தேசியப் பசுமைத் தீர்ப்பாயம், உச்சநீதிமன்றம், தற்போது உயர்நீதிமன்றம் என்று நீதிப் போராட்டம் நடத்துவது போன்ற தோற்றத்தை ஏற்படுத்தும் ஸ்டெர்லைட் நிறுவனம் இன்னொரு பக்கம் களப் போராளிகளைக் குறிவைத்து அச்சுறுத்துகிறது. அதற்கு அரசும், அரசைக் காக்கும் காவல் துறையும் துணை போகின்றன.

நரேந்திர தபோல்கர், கோவிந்த் பன்சாரே, கல்புர்கி, கௌரி லங்கேஷ் போன்ற சமூக செயற்பாட்டாளர்களைச் சுட்டுக் கொன்றனர். இன்று முகிலனைச் சுருட்டிச் சென்றுள்ளனர். நாட்டிற்குள் இத்தனை கொலைகள் கொடூரங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. இதற்கெல்லாம் இந்த அரசு என்ன பதில் சொல்லப்போகிறது? தீவிரவாதிகள் நாட்டிற்கு வெளியில் மட்டுமா இருக்கிறார்கள். வெளியில் இருக்கும் தீவிரவாதிகளை அழிக்க விமானத் தாக்குதல் நடத்தும் அரசு உள்ளிருக்கும் தீவிரவாதிகளோடு மட்டும் உறவாடுகிறது.

நாட்டைக் காக்கும் இராணுவ வீரர்களுக்கே இங்கு பாதுகாப்பில்லை, நாட்டில் நடக்கும் சுரண்டல்களைக் கேள்வி கேட்கும் கொள்கை வீரர்களுக்கு எப்படிப் பாதுகாப்பு இருக்கும்.

இராணுவ வீரர்களின் உயிர், போலி தேசபக்தியை வளர்க்க; சமூக செயற்பாட்டாளர்களின் உயிர் அப்போலி தேச பக்திக்குச் சேதம் ஏற்படாமலிருக்க.

இன்று ஒரு முகிலனைக் காவி முகில்களும், கார்ப்பரேட் முகில்களும் மறைக்கலாம். ஆனால் இந்தக் காவி முகில்களையும் கார்ப்பரேட் முகில்களையும் ஒளிக்கதிர்களால் சுட்டெரிக்கும் ஆயிரம் ஆயிரம் சூரியன்களை, பகுத்தறிவுப் பகலவனின் மண் தோற்றுவிக்கும்.

●

# தொலைந்தன கோப்புகள்!

## "தொலைச்சுப்புடுவோம்"




● சுப. வீரபாண்டியன்

ரபேல் விமான ஊழலில், மத்திய அரசுக்கு எதிரான பல சான்றுகளைக் காங்கிரஸ் கட்சியின் தலைவர் ராகுல் காந்தி நாடாளுமன்றத்தில் எடுத்துக் காட்டினார். இன்றுவரையில் உரிய விடையை மத்திய அரசு தரவில்லை. நாடாளுமன்றக் கூட்டுக்குழுவிற்கு விசாரணையை அனுப்புவதற்கும் ஒப்புக்கொள்ளவில்லை.

இப்போது அது தொடர்பான கோப்புகள் அனைத்தும் தொலைந்து போய்விட்டன என்று "பொறுப்பாக" பதில் சொல்லியுள்ளனர்.பேச்சு வழக்கில் "சோலி முடிஞ்சுது" என்று வேடிக்கையாகச் சொல்வார்கள். அப்படித்தான் ரபேல் விவகாரத்தை முடிப்பதற்கு மத்திய அரசு முயற்சி செய்கிறது.

வரவிருக்கும் தேர்தலில் பாஜக வெற்றி பெற வாய்ப்பில்லை என்பதை அறிந்து கொண்ட அக்கட்சி, தேர்தலையே தள்ளிப்போட பல சூழ்ச்சிகளைத் திட்டமிட்டது. விமானி அபிநந்தன் பாகிஸ்தான் படையிடம் சிக்கிக்கொண்டவுடன், அதைக் காரணமாகக் காட்டி ஒரு போர்ச் சூழலை இங்கு உருவாக்க முயன்றனர்.

பாகிஸ்தான் மீது போர் தொடுக்க இதுவே தக்க தருணம் என்று முடிவெடுத்தனர். ஒரே கல்லில் இரண்டு மாங்காய் என்று எண்ணி மகிழ்ந்தனர். ஆனால், பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கான் வீசிய பந்து இவர்கள் விக்கெட்டைச் சாய்த்துவிட்டது. இவர்களின் ஆசையில் அவர் மண் அள்ளிப் போட்டுவிட்டார்.

தேர்தலைச் சந்தித்தே ஆக வேண்டிய கட்டாயம் ஆளும் பாஜக கட்சிக்கு ஏற்பட்டுவிட்டது. வேறு வழியின்றி உறுதிமொழிகளை ஊரெங்கும் அள்ளித் தெளித்துக் கொண்டிருக்கின்றனர்.

**"தொலைச்சுப்புடுவோம்" என்று கூறியது மத்திய அரசு. பாகிஸ்தானைப் பார்த்துத்தான் இப்படி மிரட்டுகிறார்கள் என்று நினைத்தோம். அவர்கள் ரபேல் கோப்புகள் பற்றித்தான் அப்படிச் சொல்லியிருக்கிறார்கள் என்பது இப்போது புரிகிறது.**

-ஒரு முகநூல் பதிவு

கஜா புயல் வீசிய போது, வரைபடத்தில் தமிழ்நாடு எங்கே இருக்கிறது என்றே தெரிந்து வைத்துக்கொள்ளாத நம் பிரதமர் மோடி, இப்போது தில்லிக்கும் தமிழ்நாட்டுக்கும் சீசன் டிக்கெட் எடுத்து வைத்துக் கொண்டு வாரம் ஒருமுறை வந்து போகின்றார்.

சென்னை சென்ட்ரல் தொடர்வண்டி நிலையத்திற்கு, எம்ஜிஆர் பெயரைச் சூட்டப் போகின்றாராம். இனிமேல் தமிழ்நாட்டில் இருந்து புறப்படும், வந்து சேரும் விமானங்கள் அனைத்தும் தமிழில் பேசுமாம். தேர்தல் வந்தால் இவர்களுக்குத் தமிழ் நினைவுக்கு வரும். ஆட்சிக்கு வந்தால் சமஸ்கிருதம் பெருமை பெறும்.

ராணுவம் தொடர்பான கோப்புகளையே தொலைத்து விட்டவர்கள், நாட்டை எப்படிக் காப்பாற்றுவார்கள் என்று கேட்கிறார் திமு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின். இதே கேள்வியை தேர்தல் நாளில் மக்களும் கேட்பார்கள். ●

## கண்டன ஆர்ப்பாட்டம்



திருக்குறளை இழிவுபடுத்தி நூல் எழுதிய முன்னாள் தொல்லியல் துறை இயக்குனர் நாகசாமியை, மத்திய அரசு, செம்மொழி விருதுகளுக்கான தேர்வுக் குழுவில் உறுப்பினராக நியமித்துள்ளது. தமிழுக்கு எதிரான மத்திய அரசின் போக்கினைக் கண்டித்தும், அக்குழுவில் இருந்து உடனடியாக அவரை நீக்கக் கோரியும் திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் சார்பில் 09.03.2019 காலை சென்னை வள்ளுவர் கோட்டம் அருகில் கண்டன ஆர்பாட்டம் நடைபெற்றது. பேரவையின் பொதுச்செயலாளர் சுப. வீரபாண்டியன் தலைமையில் நடைபெற்ற ஆர்பாட்டத்தை, திமு கழக மாவட்டச் செயலாளர் ஜெ.அன்பழகன் தொடக்கி வைக்க, திராவிடர் கழகத் துணைத் தலைவர் கலி.பூங்குன்றன் முன்னிலை வகித்தார்.

ஆசிரியர்
**சுப.வீரபாண்டியன்**

பொறுப்பாசிரியர்
**எழில். இளங்கோவன்**

ஆசிரியர் குழு
**தமிழ்மறவன்**
**உதயகுமார்**
**வெற்றிச்செல்வன்**

வெளியிடுபவர்
**கோ.தினகரன்**

இணையதளம்
**www.keetru.com**
**www.peravai.com**
**www.peravainoolagam.com**


மின் அஞ்சல்
**karunchattai@gmail.com**

டுவிட்டர்
**suba_vee**

தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை - 600 024

தொலைபேசி: 044-4204 7162

## கரூர் மாவட்டம்



திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் கரூர் மாவட்டத் தலைவராகச் சிலம்புச்செல்வனும், செயலாளராக தமிழ்க்கவியும் 18.2.2019 அன்று அமைப்புச் செயலாளர் புலேந்திரனால் நியமிக்கப் பட்டுள்ளார்கள்.

## தென்காசி




23.2.2019 அன்று தென்காசி வனவேங்கைகள் கூட்டத்தில் பொதுச்செயலாளர் சுப.வீரபாண்டியன் உரையாற்றினார்.

## சென்னை



திராவிட இயக்கத் தமிழர் பேரவைத் தலைமை அலுவலகத்தில் 2.3.2019 அன்று மஸ்கட் தோழர்கள் சுபவீயைச் சந்தித்த போது...

தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!

# கருஞ்சட்டைத் தமிழர்

## தவணைமுறை ஆணையம்

நம்மூர் பத்திரிகைகள், தொலைகாட்சிகளுக்கு இணையாக 'நடுநிலையாக'ப் பணியாற்றும் இந்தியத் தேர்தல் ஆணையத்தின் தன்னாட்சியைப் பாராட்டாமல் இருக்க முடியுமா?

முப்பது. நாற்பது ஆண்டுகளுக்கு முன்னர் தேர்தல் காலங்கள் வரும்பொழுது, தேர்தல் ஆணையம் தவணை முறையில் தேர்தல் தேதி குறித்துப் பேசிக்கொண்டிருக்காது. பளிச்சென்றுச் தேதியை அறிவித்துத் தேர்தலை நடத்தும்,

அங்கே குறைகள் குறைவாக இருந்தாலும், தேர்தல் நடத்தும் முறை நிறைவாகவே இருக்கும்.

இப்பொழுது நிலைமை மாறிவிட்டது.

மத்திய பாஜகவின் ஆட்சியில், அது என்ன நினைக்கிறதோ அதுவே தேர்தல் ஆணையத்தின் 'வேத'மொழியாகி வருகிறது என்பது இன்றைய நிலை.

"விரைவில் தேர்தல்" - தேர்தல் ஆணையம்.

"விரைவில் தேர்தல் தேதி அறிவிக்கப்படும்"

"15 நாள்களில் தேர்தல் தேதி அறிவிப்பு"

- 15 நாள்கள் கழித்து தேர்தல் தேதியை அறிவிக்கும் தேர்தல் ஆணையம்.

விரைவில் தேர்தல் என்று தொடங்கிய ஆணையம், மூன்று அல்லது நான்கு மாதங்களுக்குப் பிறகு, சில முன்னறிவுப்புகளுக்குப் பிறகு ஏன் தேதியை அறிவிக்கிறது?

மத்திய மாநில ஆளும் கட்சிகள் இந்த நீண்ட இடைவெளிக் காலங்களைப் பயன்படுத்தி 2,000 ரூபாய் ஏழைகளுக்கு உதவி நிதி என்றும், 6,000 ரூபாய் விவசாயிகளுக்கு உதவி நிதி என்றும், முன்பு உயர்த்திய ஜி.எஸ்.டி வரியை குறைக்கிறோம் என்றும் பல போலிச் சலுகைகளைச் சொல்லி மக்களைத் தன்வயப் படுத்துவதற்காகத்தான் இந்த நீண்ட இடைவெளியை தேர்தல் ஆணையம் 'பெருந்தன்மை'யோடு வழங்குகிறது.

அதிலும் பணமாகக் கொடுக்கும் அரசு நிதிகள், தேர்தலுக்கான கையூட்டுகளாக மாற்றப்படும்.

தபால் ஓட்டுகளைக் கூட பேரம் பேசுகின்ற கொடுமை நடைபெறும்.

இப்படிப்பட்ட அதிகார வரம்பு மீறலுக்கு, ஆளும் அரசுகளுக்குப் போதிய கால இடைவெளி வாய்ப்பைக் கொடுக்கவே தவணை முறைத் தேர்தல் அறிவிப்பைத் தேர்தல் ஆணையம் வெளியிடுகிறது.

இத்தகைய செயலால் தேர்தல் ஆணையம் மக்களிடம் நம்பகத் தன்மையை இழந்து வருகிறது என்பது ஒருபுறம் இருந்தாலும், அதையும் மீறித்தான் மக்கள் தங்கள் சனநாயகக் கடமையைச் செய்ய வேண்டி இருக்கிறது.

பாஜக பிடியிலிருக்கும் தேர்தல் ஆணையம் மீண்டும் தன்னாட்சி ஆணையமாக மாறவேண்டும்.

அதற்கு மோடியின் பாஜக அரசையும், ஆர்எஸ்எஸ் கூட்டத்தையும் வருகின்ற நாடாளுமன்றத் தேர்தலில் தோற்கடிக்க வேண்டும்!

# பார்ப்பன ஆணாதிக்கம்!

● ஸ்ரீவித்யா

சாதிய, பெண்ணிய அநீதி என்ற சித்தாந்தத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்டது தான் “இராஷ்ட்ரிய சுயம் சேவக் சங்” (RSS). நால்வருணக் கோட்பாடும், மனுஸ்மிருதியும் இதற்கு அடிப்படை மூலம். இந்த மனுஸ்மிருதியை இந்தியாவின் சட்டமாக மாற்றத் துடிக்கும் ஆர்எஸ்எஸ்ஸின் அரசியல் கருவிதான் பாஜக. மனுஸ்மிருதி பெண்களின் அடிப்படை உரிமையையும் சுதந்திரத்தையும் சனாதன தர்மம் என்கிற பெயரில் தடை செய்கிறது.

எடுத்துக்காட்டாகப் பெண்களை வழக்குகளுக்குச் சாட்சியாக கூட ஏற்க கூடாது என்கிறது மனுஸ்மிருதி. ஆர் எஸ் எஸ், பாஜக இரண்டும் பெண்களை இழிவுபடுத்தும் விதத்தைச் சபரிமலை விவகாரத்தில் இருந்து புரிந்து கொள்ளலாம். இயற்கை நிகழ்வான மாதவிடாய் என்னும் கருப்பை சார்ந்த சாதாரண உடல் இயக்கத்தைத், தீட்டு என்னும் பெயரால் பெண்களின் அடிப்படை உரிமைகளைப் பறித்துச் சபரிமலை ஐயப்பன் பெயரால் மறுக்கிறது பார்ப்பனியம்.



காலம் காலமாக கடைப்பிடிக்கப்பட்டு வரும் மரபு என்ற பெயரில் பெண்களைக் கோயிலுக்குள் அனுமதிக்காமல் இருப்பதை ஏற்க முடியாது என்றார் ஆர்எஸ்எஸ்ஸின் பொதுச்செயலாளர் பையாஜி ஜோஷி 2016-ஆம் ஆண்டு. இப்போது உச்ச நீதிமன்ற தீர்ப்பு வந்தவுடன் பக்தர்களின் உணர்வை, நீதிமன்றத் தீர்ப்பு என்ற பெயரால் புண்படுத்தக் கூடாது என மாற்றிப் பேசுகிறார். மாற்றிப் பேசுவதும் மன்னிப்பு கேட்பதும் ஆர்எஸ்எஸ்ஸின் அடையாளங்களில் ஒன்றாகவே இருக்கிறது.

ஆர்எஸ்எஸ் தலைவர் மோகன் பகவத், வெற்றியாளர்களாக ஆண்கள் இருப்பதுடன் அவர்களுக்குப் பெண்கள் பணிவிடை செய்ய வேண்டும் என்றும், அத்தகைய கடமைகளிலிருந்து தவறும் பெண்களைக் கணவர்கள் கைவிடலாம் என்றும், மேற்கு உலக நாகரிகமே பெண்கள் மீதான பாலியல் வன்முறைகளுக்குக் காரணம் என்றும் கருத்துகளைத் தெரிவிக்கிறார்.

கே.பி ஹெட்கேவரால் 1925-இல் உருவாக்கப்பட்ட இந்த ஆர்எஸ்எஸ் இல் இந்துப் பெண்களுக்கு அனுமதி கிடையாது. பெண்கள் அடிப்படையில் விபச்சாரக் குணம் உடையவர்கள் என்ற மனுஸ்மிருதியின் அடிப்படையில் பெண்களை நிராகரிக்கிறார்கள்.

இலட்சுமிபாய் கேல்கர் என்பவரின் தொடர் முயற்சியால் பெண்களுக்கான தனி அமைப்பை 1936 இல் தொடங்க ஹெட்கேவர் அனுமதி அளித்தார். அந்த அமைப்பின் பெயர் " இராஷ்ட்ரிய சேவிகா சமிதி "(RSS).

இராஷ்டிரிய சுயம் சேவக் சங்கத்தின் இந்து தேசம் காத்தல் என்னும் கொள்கையை, முழுமையாக ஒலிப்பதே இராஷ்டிரிய சேவிகா சமிதிதான். ஆர்எஸ்எஸ்ஸின் இந்த இரு அமைப்புகளுமே தேசபக்தி என்ற போர்வையில் மறைமுகமாகப் பார்ப்பனியத்தை நிலைநிறுத்த முயன்று கொண்டிருக்கின்றன.

ஆர்எஸ்எஸ்ஸின் மகளிர் அமைப்பு இந்து தேசம் காத்தல் என்ற பெயரில் அங்குள்ள பெண்களுக்கு எத்தகைய எண்ணங்களை விதைக்கிறது என்பதை 2017 இல் வெளிவந்த ஒரு ஆங்கில நாளேட்டின் கட்டுரையின் மூலம் அறிந்து கொள்ளலாம்.

தாய்மை அடைதல் என்பது இயற்கையின் நியதி. ஆகையால் பெண்கள் மனைவி, சகோதரி, தாய் என்ற பொறுப்புகளிலிருந்து விலகாமல் தன் கடமையைச் செய்ய வேண்டும் என்கிறது சேவிகா சமிதி.

இந்த அமைப்பை உருவாக்கிய இலட்சுமிபாய் கேல்கர், சமூக அமைப்பு முறையான திருமணத்தைப் பெண்கள் ஒருநாளும் புறக்கணிக்கக் கூடாது என்கிறார்.

இன்னொரு சேவகியான நீலிமா கபூர் என்பவர் இஸ்லாமியர்கள் அதிகப் பிள்ளைகளைப் பெற்று எண்ணிக்கையில் உயர்கிறார்கள். ஆகையால் இந்துப் பெண்கள் ஒரு பிள்ளையோடு நிறுத்திக் கொள்ளக் கூடாது என்கிறார். இரண்டு பிள்ளைகள் இருந்தால் ஒருவர் இந்து தேசத்திற்கும், இன்னொரு பிள்ளை குடும்ப வாழ்க்கைக்கும் எனத் தேர்ந்தெடுத்து இந்து மக்கள் தொகையைப் பெருக்க வேண்டும் என்கிறார்.

இந்த இரு அமைப்புகளுமே தேசபக்தி என்ற பெயரில் பெண்களின் அடிப்படை உரிமையான காதல், சுதந்திரம், தனித்தன்மை ஆகியனவற்றைப் பறித்து, ஆண்களுக்குத் தன் வாழ்க்கையை முழுமையாக அர்ப்பணித்தலே பெண்களின் கடமை என்று பக்தியுடன், மதவெறியையும் விதைக்கின்றன.

நிர்வாக முறைக்காக இஸ்லாமிய , பார்சி, கிறிஸ்துவர்கள் அல்லாத மக்களை வேறுபடுத்திக்காட்ட ஆங்கிலேயர்களால் கொடுக்கப்பட்ட சொல்தான் இந்து.

இந்த சொல்லைத் தங்களுக்கு சாதகமாக்கிக் கொண்டு பார்ப்பனர்கள் தங்களின் நால்வருணமுறையை நிலை நிறுத்திக் கொள்ள முயன்றுவருகின்றனர்.

இந்தியாவைப் பாரதம் என்ற பெயரில், மீண்டும் பார்ப்பனிய ஆதிக்கத்தை நடைமுறைபடுத்த நினைக்கும் ஆர்எஸ்எஸ் இன் கருவியாகச் செயல்படும் பாஜகவின் ஆட்சி தொடரக்கூடாது. தொடர்ந்தால் எதிர்காலத்தில் பெண்கள் மட்டுமல்ல, ஒட்டு மொத்த இந்திய மக்களும் அனைத்து உரிமைகளையும் இழக்கநேரிடும். அத்தகைய சூழல் ஏற்படுவது நாகரிகம் வளர்ச்சி அடைந்த மனித இனத்திற்கு மிகப்பெரிய கேடாகும்.

கொடிய நஞ்சு நிறைந்த பாம்பையும், தேளையும் கண்டவுடன் அதனை அகற்றி மனிதன் தன்னை பாதுகாத்துக் கொள்கிறான். இந்த வரிசையில் முதலில் இடம்பெறவேண்டிய பார்ப்பனியத்தை இம்மண்ணிலிருந்து அகற்றுவதே மனித இனத்திற்குப் பாதுகாப்பானதாகும். ●

## காஞ்சிபுரம்




*03.03.2019* அன்று, காஞ்சிபுரத்தில் நடைபெற்ற, கவிப்பேரரசு வைரமுத்துவின் தமிழாற்றுப்படை நிகழ்ச்சியில் வாழ்த்துரை வழங்கும் தோழர் சுபவீ.

## நிதி அறிவுரைக் கூட்டம்



திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் நிதி அறிவுரைக் கூட்டம் தலைமை அலுவலகத்தில் பொதுசெயலாளர் முன்னிலையில் நடைபெற்றது. ஒருங்கிணைப்பாளர் செல்வின், உறுப்பினர்கள் லாரன்ஸ், பாபு கலந்துகொண்டனர்.

## பெரியார் திடல்



திராவிடக் கொள்கை விளக்க அறிக்கை பற்றிய கருத்தரங்கம் 5.3.2019 அன்று, சென்னை பெரியார் திடலில், தமிழர் தலைவர் கி.வீரமணி தலைமையில் நடைபெற்றது.

## மதுரை



அய்யன் திருவள்ளுவர் இலக்கிய மன்றத்தின் ஏழாவது ஆண்டுவிழா மக்கள் முன்னிலையில், 7.3.2019 அன்று மதுரையில் ஒரு பொதுக்கூட்டமாக நடைபெற்றது. ‘அறமும் தர்மமும்’ என்னும் தலைப்பில் சுபவீ உரையாற்றினார்.

## ‘மனு அதர்மம்’ நூல் வெளியீடு




திரு வெ. நாராயணசாமி எழுதியுள்ள ‘மனு அதர்மம்’ நூல் வெளியீட்டு விழா, 26.2.2019 அன்று கந்தர்வ கோட்டையில் சிறப்பாக நடைபெற்றது. தோழர்கள் சி. மகேந்திரன், சுபவீ, வன்னியரசு உள்ளிட்டோர் பங்கேற்றுச் சிறப்புரை ஆற்றினர்.

Publisher G.Dinakaran. Editor Suba. Veerapandian, General Secretary, Dravida Iyyakka Tamilar Peravai.